**Previous Examination date – 15.05.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 184 of 2020**

**Deposition of Witness P. W.7**

| | |
|---|---|
| **Name : காளியம்மாள்** | **Father/Husband's Name : பங்காருசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.06.2025**

**Accused absent. 317 Cr.P.C. PFA.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சிந்தலவாடம் பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மருமகள் ஆவர். அ.சா.2 எனது தம்பி. மேற்படி வழக்கில் இறந்துபோன செந்தில்குமார் எனது மகன் ஆவார். கடந்த 15.01.2020 ம் தேதி பழனியில் இருந்து திண்டுக்கல் ரோட்டில் சிந்தலவாடம்பட்டி செல்வதற்காக பழனி பைபாஸ் அருகே நின்றிருந்த எனது மகன் செந்தில்குமாரை பார்த்ததும் எனது தம்பி மதிவாணன் மற்றும் எனது மருமகள் சுதா சென்றிருந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி நானும் சிந்தலவாடம்பட்டி வருவதாக செந்தில்குமார் கூறினார். கணக்கன்பட்டி அருகே செல்லும்போது எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய வாகனமான கார் கிழக்கிருந்து மேற்காக வந்து மோதியது. எனது மருமகள், எனது தம்பி பார்த்து பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தனர். மேற்படி சம்பவத்தை எனது தம்பி மதிவாணன் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார். நான் பழனி அரசு மருத்துவமனைக்கு சென்று எனது மகனை பார்த்தேன். எனது மகனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் மேல்சிகிச்சைக்காக எனது மகனை மதுரை அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தோம். பின்னர் ஒரு வாரம் சிகிச்சைக்கு பிறகு எனது மகன் இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2.** **இந்த வழக்கு விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.**

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.06.18 18:30:54 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date – 15.05.2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 184 of 2020**

**Deposition of Witness P. W.8**

| | |
|---|---|
| **Name : துரைசாமி** | **Father/Husband's Name : வெள்ளைச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 18.06.2025**

**Accused absent. 317 Cr.P.C. PFA.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது சிந்தலவாடம் பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நானும் ராமசாமியும் சிந்தலவாடம்பட்டியில் இருந்து பழனி வந்துகொண்டிருந்தபோது சச்சிதானந்தசபை அருகே போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். போலிசார் அந்த இடத்தை விபத்து நடந்த இடம் என்று படம் வரைந்து எழுதினார்கள். நானும் ராமசாமியும் கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதிருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். போலிசார் கேட்டுக் கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்ன எழுதியிருந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.06.18 18:31:01 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**